பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 16 செவ்வாய்க்கிழமை 30.01.2024 கதிர் 84

# கொழும்பில் இன்று மக்கள் போராட்டம்

## 50 ஆயிரம் பேரைத் திரட்ட ஐக்கி மக்கள் சக்தி ஏற்பாடு

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்றைய ஆட்சியாளர்களுக்கு எதிராக இன்று கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளது.

“எந்தவொரு கட்டுப்பாடுகளையும்கவனத்தில்கொள்ளாது, வீதியில் இறங்கி தற்போதைய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான முதல் சூட்டை நடத்தும்” என்று கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

‘பொலிஸார் அல்லது வேறு எவரும் எந்த தடையையும் விதிக்கலாம். ஆனால்

☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தெற்கில்ரணில்தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சியும்ராஜபக்சக்கள் தலைமையிலான பொது ஜன பெரமுனவும் பலமிழந்து, புதிய கூட்டணிகளையும் அமைக்கத் திணறி வரும் நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீண்டும் அரசியலில் ஒரு சுற்று வருவார் போன்று தோன்றுகின்றது.

பலமான தேர்தல் கூட்டுக்களை உருவாக்கமுடியாதநிலையில்ஐக்கிய தேசியக் கட்சியும் பெரமுனவும் திணறும் நிலையில், வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டுதலையெடுத்து விடலாமா என்று பார்க்கின்றது சிறிலங்கா சுதந்திரக் கட்சி. அதற்கான முயற்சியாக முன்னாள் ஜனாதிப-திசந்திரிகாபண்டாரநாயக்க குமாரணதுங்க தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை

☞ 2

## தொடருந்து சரக்கு கட்டணம் பெப்ரவரி 1 முதல் அதிகரிப்பு

தொடருந்தில்கொண்டுசெல்லப்படும் சரக்குகளுக்கான கட்டணம் பெப்ரவரி முதலாம் திகதி முதல் அதிகரிக் கப்படவுள்ளது.

18.01.2024 வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானியில், பார்சல்கள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்கான கட்டணங்கள்மற்றும்பிறதொடர்புடைய விதிமுறைகள் திருத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக இந்தக் கட்டண உயர்வு

☞ 2

## கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை மீன்பிடிப் படகு மீட்பு

அரபிக் கடலில் கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட ’லொரன்சோ புத்தா4’ படகு சீசெல்ஸ் கடலோர பாதுகாப்புப் படையினரால் மீட்கப் பட்டதாக இலங்கை அரசுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இதனை சீசெல்ஸ் கரையோரப்பாதுகாப்புப் படையினர் நேற்று பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிப்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித் தனர்.

ஆழ்கடல் மீன்பிடிப் படகான ’லொரன்சோபுதா 4’ கடந்த ஜனவரி 12 ஆம் திகதி 6 மீனவர்களுடன் திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்திலிருந்து தனதுமுதல்பயணத்தை ஆரம்பித்தது. கரையில் இருந்து 1,160 கடல் மைல் தொலைவில் உள்ள அரபிக் கடலில் சோமாலிய கடற் கொள்ளையர்களால் இந்தப்படகு கைப்பற்றப் பட்டதாக மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டது.

இதன்படி, காணாமல்போன படகு தொடர்பில் தேடிப்பார்க்குமாறு இலங்கை கடற்படையினர் பஹ்ரைனில் அமைந்துள்ள 40 நாடுகளை உள்ளடக்கிய கூட்டுகடல்படையணிக்கு அறிவித்தனர்.

சோமாலிய கடற் கொள்ளையர்களால் கைப்பற்றப்பட்ட மீன்பிடிப்படகைக்கண்டு பிடிக்க சீசெல்ஸ் கரையோரப்பாதுகாப்புப்படை விசேட தேடுதல் நடவடிக் கையைத் தொடங்கியது. சோமாலிய கடற்கொள்ளையர்களின் பிடியில் இருந்த படகை அவர்கள் கண்டுபிடித்னர். அத்துடன், இரண்டு சோமாலிய

☞ 2

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் போராட்டக்காரர்களால் முறைப்பாடு

லிபேர்ட்டி சுற்றுவட்டத்தில்போராட்டத்தினை முன்னெடுத்தவர்களை நெருக்கடியில் உள்ளாக்கியவர்கள் மீது மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தின் நடுப்பகுதியில், சுழலியல் செயற்பாட்டாளரும், மனித உரிமைகள் ஆர்வலருமான அஜந்தா பெரேரா உள்ளிட்ட குழுவினர் லிபேர்ட்டி சுற்றுவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனைத் தடுத்து நிறுத்திய இனந்தெரியாத குழுவினர் மிகக் கடுமையாக அவர்களை விமர்சித்தனார். அப்பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் அவர்களை வெளியேற்றியதோடு போராட்டத்தில்ஈடுபட்டவர்களையும் அங்கிருந்து அகற்றிருந் தனர்.

இருந்தபோதும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தியமையை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனைஅடுத்தேகுறித்த போராட்டகாரர்கள்மனித உரிமைகள்பேரவையில் முறையிட்டுள்ளனர்.

## மின் கட்டணங்களை செலுத்த புதிய முறை

மின் கட்டணத்தை செலுத்துவதற்கு நுகர்வோருக்கு சில புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபை (ஶீசிய) செயற்பட்டு வருவதாக அந்தச் சபையின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இலங்கை தபால் திணைக்களம், உத்தியோகபூர்வ இணையத் தளம் (ceb.lk) ஊடாகவும் வங்கி (KIOSK) இயந்திரங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் ஊடாகவும் (mCash) ஊடாகவும் CEB Care செயலி,இணையவங்கிச் சேவைகள்மூலமாகவும் கட்டணங்களைச்செலுத்தும் முறையை CEB அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில்எழும் பிரச்சினைகள் தொடர்பில் 1987 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் நுகர்வோர் முறைப்பாடுகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## சமூகச் செயற்பாட்டாளர் நிகேஷல சிஐடியால் கைது



சமூக செயற்பாட்டாளரான பியத்நிகேஷல குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவினால் (சிஐடி) நேற்றுக் கைது செய்யப் பட்டார்.

வாக்குமூலம்பெறுவதற்காக அவர்

☞ 2

## இராஜாங்க அமைச்சராக லொஹான் பதவியேற்பு



பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சராகலொஹான் ரத்வத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில்

☞ 2

## அரைவாசி விலையில் இனித் தேயிலை உரம்

தேயிலைச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்குடன் இரு அரச நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உரம் அரைவாசி விலையில்வழங்கப்படும் என்று கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு என்ற வகையில், இந்த ஆண்டு விவசாயம் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அபிவிருத்திக்கான இலக்கு நோக்கிய வேலைத் திட்டத்தை தொடங்கியுள்ளோம்.

2023ஆம்ஆண்டில், நாட்டில்சிறுபோகத்திலும் பெரும் போகத்திலும் உரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி மானியங்களுக்காக சுமார் 22 பில்லியன் ரூபாவைசெலவிட்டோம். அத்துடன் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசு 13 பில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது.

அதன்படி 2022ஆம் ஆண்டு 8 மெட்ரிக்தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் 2023ஆம் ஆண்டுஅரிசிஇறக்குமதி செய்யப்படவில்லை. நம் நாட்டு விவசாயிகள் உற்பத்திசெய்தஅரிசியை இந்த நாட்டு மக்கள் வருடம் முழுவதும் உட்கொண்டார்கள் என்றே கூறவேண்டும். நெருக்கடியான நிலையிலும், அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளதால், இந்த ஆண்டும் அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்க்க வில்லை.

கடந்த

☞ 2

## முன்னாள் இராணுவத் தளபதி எதிர்க்கட்சியில் திடீர் இணைவு



இறுதிப் போரில் முக்கிய பணியாற்றிய முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்நாயக்க திங்கட்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் ணைந்து கொண்டார்.

இதனையடுத்து ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுக் கொள்கைகள் தொடர்பான மூத்த ஆலோசகராக ஜெனரல் தயா ரத்நாயக்கவை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று நியமித்தார்.

இலங்கை இலேசாயுத காலாட் படையணியின் தளபதியான இவர், பின்னர் இராணுவத்தின் தளபதியாகவும் பணியாற்றினார்.

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

உருவாக்கப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இந்தக் கூட்டணியைப் பின்னணியில் இருந்து இயக்குகிறார். கூட்டணியின் தலைவராக சந்திரிகா முன்னிறுத்தப்பட்டாலும் மைத்திரியே ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் சாத்தியங்கள் அதிகம் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரக் கட்சி தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்கிற கூட்டு ஒன்று வெற்றிலைச் சின்னத்துடன் ஏற்கனவே உள்ளது. ஆனால், அதன் செயலாளர் யார் என்பது தொடர்பில் அமைச்சர் மகிந்த அமரவீர மற்றும் முன்னாள் பிரதி அமைச்சர் திலங்க சுமதிபால ஆகியோருக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. இதனால் அந்த முன்னணியை உடனடியாக மீண்டும் செயற்படுத்த முடியாது என்கிற நிலையிலேயே புதிய கூட்டணியை உருவாக்குவதற்கான முயற்சிகளில் சுதந்திரக் கட்சி தீவிரமாக இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் தொடர்பான வழக்கைத் திரும்பப் பெறுமாறு மைத்திரி வழக்கின் இரு தரப்பினருக்கும் அறிவுறுத்தியுள்ளார் என்றபோதும் கதிரைச் சின்னத்தில் சந்திரிகா தலைமையில் புதிய கூட்டணியை உருவாக்குவதிலேயே சுதந்திரக் கட்சியின் கவனம் இப்போது குவிந்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்திரிக்காவுக்கும் மைத்திரிக்கும் இடையில் கடந்த பல ஆண்டுகளாக உறவுகள் சுமுகமாக இல்லை. மைத்திரியை மிகக் கடுமையாக எதிர்த்து வந்தவர் சந்திரிக்கா. தொடக்கத்தில் மைத்திரி - ரணில் கூட்டை ஏற்படுத்தி அதற்கூடாக மைத்திரியை ஜனாதிபதி வேட்பாளராக்கியதில் சந்திரிக்காவுக்கும் பெரும் பங்குண்டு. ஆனாலும் பின்னர் மைத்திரி-ரணில் கூட்டு ஆட்சியின் கடைசிக் காலத்தில் மகிந்த ராஜபக்சவைப் பிரதமராக்கி ரணிலின் ஆட்சியை தூக்கி எறிய மைத்திரி முடிவு எடுத்ததைத் தொடர்ந்து சந்திரிக்காவுக்கும் மைத்திரிக்கும் இடையிலான உறவுகள் மோசமடைந்தன.

இப்போது இருவரையும் சமாதானப்படுத்தி புதிய கூட்டணிக்குள் ஒன்றிணைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே புதிய கூட்டணிக்கான ஆயத்தங்கள் இடம்பெற்றுவருகின்றன. இன்னும் சிலநாட்களில் புதியகூட்டணிபற்றிய முழுமையான விவரங்களும் அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் அனைத்து சட்டங்களையும் மீறி நாளை 50,000 பேரை கொழும்புக்கு அழைத்து வருவோம்' எனமத்துமபண்டார ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

'2022 இல் மக்கள் போராட்டத்திற்கான முன்னோடிகளாக நாங்களே திகழ்ந்தோம். இம்முறையும் அதையே செய்ய நாங்கள் உத்தேசித்துள்ளோம்' என்று மத்தும பனாதர மேலும் கூறினார்.

'நாங்கள் எங்கு அணிவகுத்துச் செல்வோம் என்பதை இப்போது நாங்கள் வெளியிட மாட்டோம், ஆனால் நாளை சரியான நேரத்தில் அதை வெளிப்படுத்துவோம்,' என்று அவர் மேலும் கூறினார்.

இந்தமாநாட்டில் கலந்துகொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம், இணையவழி பாதுகாப்பு சட்டம் மற்றும் வரி அதிகரிப்பு போன்ற அடக்குமுறை சட்டங்களுக்கு எதிராகவே இந்தப் போராட்டம் நடத்தப்படும் என தெரிவித்தார்.

## இராஜாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து பதவிப்பிரமாணம் செய்துகொண்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்தது.

மேலும், அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் தீர்க்கப்படாத தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார். (05)

## சமூகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் அமைதியை சீர்குலைத்தமை, ஆட்சியாளர்கள் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை மற்றும் பொதுமக்களை ஆத்திரமடையச்செய்யும் வகையில் காணொளிகளை வெளியிட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷல கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பியத் நிகேஷல இன்று நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராகவும், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியின் அரசாங்கத்தில் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

புனர்வாழ்வுப் பணியகத்தின் ஆணையாளர் நாயகமாக இவர் பணியாற்றிய காலத்திலேயே விடுதலைப்புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் 12 ஆயிரம் பேர் முகாம்களில் அடைக்கப்பட்டுப் புனர்வாழ்வழிக்கப்பட்டனர்.

இலங்கை இராணுவ அகாடமியின் கட்டளைத் தளபதி, ஊடகப் பணிப்பாளர், பாதுகாப்பு அமைச்சின் இராணுவப் பேச்சாளர் போன்ற பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

போரின் பின்னர் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க 2013 ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் வண்ணம் இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டார்.

லெப்டினன் ஜெனரலாகவும் பதவியுயர்த்தப்பட்ட அவர், ஓய்வு பெற்றதும் ஜெனரலாக பதவி உயர்வு பெற்றார். தயா ரத்நாயக்க நாட்டின் அதிக கௌரவங்களைப் பெற்ற இராணுவ அதிகாரிகளுள் ஒருவராவார்.

இராணுவத்தில் பணியாற்றிய போது போரில் அவர் ஆற்றிய சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் அவரது வீரதீரச் செயல்களை கௌரவித்து, வீர விக்ரம விபூஷண, ரண விக்ரம பதக்கம், ரணஷூர பதக்கம், உத்தம சேவா பதக்கம், தேச புத்ர பதக்கம் போன்ற பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

# சம்மாந்துறையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்பு

## சந்தேகநபர் ஒருவர் கைது

சம்மாந்துறையில் திருடப்பட்ட பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டுள்ளதோடு, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் ஜனவரி மாதம் 14 ஆம் திகதி சுமார் 8 லட்சத்துக்கும் மேல் பெறுமதி வாய்ந்த 'பஜாஜ் பள்ஸர் என்.எஸ். 200' என்ற வகையான மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளதாக சைக்கிள் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் 16 ஆம் திகதி முறைப்பாடு செய்தார் என சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது அக்கரைப்பற்று பிரதேசத்தில் இருந்து மோட்டார் சைக்கிளை ஞாயிற்றுக்கிழமை மீட்டதுடன் திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# கடல்தொழிலுக்குச் சென்ற குருநகர் இளைஞன் மாயம்

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியிலிருந்து கடற்தொழிலுக்கு சென்ற இளைஞரை காணவில்லை.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை சேர்ந்த ஜோசப் மக்சிமஸ் சுரேஷ்குமார் (வயது 32) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளார்.

இவர் மேலும் இருவருடன் குரு நகரிலிருந்து படகில் கடற்தொழிலுக்குச் சென்றுள்ளார். கடலில் படகில் தங்கி தொழிலில் ஈடுபட்ட நிலையில், இரவு மூவரும் படகினுள் நித்திரைக்குச் சென்றுள்ளனர்.

காலையில் எழுந்து பார்த்தபோது அதில் இருந்த இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

அதனையடுத்து, இருவரும் கடலில் தேடி இளைஞரை காணாத நிலையில், கரை திரும்பி ஏனைய கடற்தொழிலாளர்களுக்கும் அறிவித் துள்ளனர்.

பின்னர், மேலதிக படகுகளுடன் கடற்தொழிலாளர்கள் கடலில் சென்று தேடியும், இளைஞரை கண்டுபிடிக்க முடியவில்லை.

இளைஞர் காணாமல்போன விடயம் தொடர்பில் கடற்தொழில் நீரியல் வளத்துறை, பொலிஸார், கடற்படையினர் உள்ளிட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (05)


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com


## கொள்ளையர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கொள்ளையர்களும் சீசெல்ஸ் கரையோரப் பாதுகாப்புப் படையினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 'லொரன்சோ புத்தா4' ஆழ்கடல் மீன்பிடிப் படகில் இருந்த 6 மீனவர்களும் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் கடத்தப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான பணிகள், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் வழிகாட்டலின் கீழ் தொடங்கப்பட்டுள்ளன. தற்போது குறித்த படகு சீசெல்ஸில் உள்ள விக்டோரியா துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொடருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறவுள்ளது.

புதிய விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், பொதிகளை எடுத்துச் செல்லும் போது, போக்குவரத்து கட்டணத்திற்கு மேலதிகமாக, பொதியிலுள்ள பொருளின் பெறுமதியின் அடிப்படையில் மற்றுமொரு கட்டணமும் அறவிடப்பட்டுள்ளது.

லாட்டரி சீட்டுகள், மருந்துகள், டயர்கள், கண்ணாடிகள், மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கு 0 முதல் 1000.00 ரூபா வரையிலான பெறுமதி சதவீதம் இல்லை. மேலும், 1000.00 முதல் 5000.00 ரூபாய் வரையிலான பெறுமதியின் சதவீதம் 1.5% ஆகவும், 5000.00 முதல் 10,000.00 ரூபாய் வரையிலான பெறுமதியின் சதவீதம் 2.25% ஆகவும் கட்டணம் அறவிடப்படவுள்ளது.

கூடுதலாக, பார்சலின் மதிப்பில் 3% 10,000.00 முதல் 20,000.00 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது மற்றும் 20,000.00 ரூபாய்க்கு மேல் பார்சல்களுக்கு 4.5% வசூலிக்கப்படுகிறது.

அதிர்ஷ்ட லாபச் சீட்டுகள், மருந்துகள், டயர்கள், கண்ணாடிகள், மின்சார மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்குச் சொந்தமில்லாத 10000.00 ரூபாவுக்கும் அதிகமான அனைத்துப் பொதிகளுக்கும் பெறுமதியில் 0.5% வீதம் அறவிடப்படவுள்ளது.

## அரைவாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டைப்போலவே வறட்சி மற்றும் வெள்ளத்தால் நெல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. வறட்சியால் 65,000 ஏக்கரும், கனமழையால் 100,000 ஏக்கரும் சேதமடைந்துள்ளன. வறட்சியினால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க எமது ஆட்சி 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. சுமார் 700 மில்லியன் ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கனமழையால் பெருமளவில் மரக்கறிப் பயிர்கள் அழிந்ததே மரக்கறி விலை உயர்வுக்கு காரணமாகும். சில விவசாயிகள் ஒரே விவசாய நிலத்தில் பலமுறை காய்கறிகளை பயிரிட்டனர். ஆனால் அவை மழையால் அழிந்துவிட்டன. ஆனால், விவசாயிகளுக்கு நாங்கள் வழங்கிய 'நெட் ஹவுஸ்'களில் பயிர் செய்தததால், ஓரளவுக்கு மரக்கறிகள் சந்தைக்கு வந்தன.

இன்னும் இரண்டு மாதங்களில் மரக்கறிகளின் விலைகள் இயல்பு நிலைக்குத் திரும்பும். 2024 ஆம் ஆண்டில், நமது தேசிய நுகர்வு இலக்கை அடைய நெல், சோளம், உருளைக்கிழங்கு மற்றும் மிளகாய் ஆகிய 4 வகையான பயிர்களின் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்க

தொடர்ச்சி 9ம் பக்கம்....




காலைக்கதிர்
Kalaikkathir

# மாயையைக் கிழித்திருக்கின்றது சர்வதேச நீதிமன்றம்: மக்கள் அதன் கட்டமைப்பை புரிந்துகொள்ளவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு



தமிழ் அரசியல் தரப்புக்களினால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும் சர்வதேச நீதிமன்றம்தொடர்பானஎதிர்பார்ப்புக்கள்அர்த்த மற்றவைஎன்பதுவெளிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளஅமைச்சர்டக்ளஸ்தேவானந்தா, மக்கள்அர்த்தமற்றமாயைகளைதொடர்ந்தும் நம்பிக்கொண்டிருக்காமல் தீர்வுகளை அடைவதற்கான நடைமுறைச் சாத்திய மான முயற்சிகளை வலுப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்து வருகின்ற தாக்குதல் தொடர்பாக தென்னா பிரிக்காவினால் சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு தீர்ப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த போதே ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டாவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - கடந்த 14 வருடங்களுக்கு மேலாக சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுத் தரப்படும் என்ற கோ-ங்களை சில தமிழ் தரப்புக்கள்; மக்கள் மத்தியில் விதைத்து வருகின்றன.

குறிப்பாக இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்ற உயிரிப்புக்களுக்கான நீதி மற்றும் காணாமல் போனோருக்கான பரிகாரம் போன்றவற்றை சர்வதேச நீதிமன்றத்தின் மூலமே பெற்றக்கொள்ள முடியும் எனவும் உள்நாட்டு பொறிமுறையில் நம்பிக்கை கொள்ள முடியாது எனவும் சொல்லுகின்ற தமிழ் அரசியல் தரப்புக்கள், தமிழ் மக்கள் மத்தியில் சர்வதேச நீதிமன்றம் தொடர்பான மாயையை ஏற்படுத்தி இருக்கின்றனர்.

தற்போது, இஸ்ரேல் விவகாரத்தில் தென்னாபிரிக்காவால் சர்வதேச நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கிற்கு வழங்கப்பட்டுள்ள தீர்ப்பானது, சர்வதேச நீதிமன்றின் சிந்தனை மற் றும் பார்வை எத்தகையது என்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

ஆயிரக்கணக்கான மக்களை தினமும் அழித்துக் கொண்டிருக்கிற தாக்குதல்களைநிறுத்துமாறுஉலகின் அதியுச்ச நீதிமன்றக் கட்டமைப் பான சர்வதேசகுற்றவியல்நீதிமன்றம்உத்தரவிடவில்லை. இனப்படுகொலை மற்றும் யுத்த குற்றம் தொடர்பான சர்வதேச நியமங்களை மதித்து நடக்குமாறு சொல்லியிருக்கிறது.

காஸாவில்குறுகியபிரதேசத்தில்பலலட்சம் அப்பாவி மக்கள் செறிந்து வாழ்கிறார்கள் என்பதோ, தாக்குதல் தொடர்ந்தால் அப்பாவி மக்களின் அழிவுகள் தவிர்க்க முடியாதவை என்பதோ சர்வதேச நீதிமன்றிற்கு தெரியாத சமாச்சாரங்கள் இல்லை. அப்படியிருந்தும் தாக்குதலை நிறுத்துமாறு தீர்ப்பில் சொல்லப்படவில்லை.

இவ்வாறான சம்பங்கள் ஊடாக, சர்வதேச கட்டமைப்புக்களின் மனோநிலையையும் அவற்றின் நிகழ்ச்சி நிரல்கள் எத்தகையவை என்பதையும் எமது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (05)

# தமிழ் அரசு ஒற்றுமையான பின்னரே கூட்டமைப்பும் ஒற்றுமையாகலாம்

## சிறிதரனுக்கு சித்தர் அற்வைஸ்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் ஒற்றுமையாக வேண்டுமானால் அது பதிவு செய்யப்பட்ட கட்சியாக வேண்டும் எனத் தெரிவித்த புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் அரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு விட்டுக்கொடுக்கலாம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி இரண்டு மூன்று பிளவாக உடைந்து இருக்கிறது என்றும் அவர்கள் ஒற்றுமையாகிய பின்னரே கூட்டமைப்பு ஒற்றுமை பற்றி பார்க்கலாம் என்றார்.

கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய தலைவர் இன்னும் பதவியேற்கவில்லை. அதிலும் சிக்கல் ஒன்று காணப்படுகிறது. அதன் தேசிய மாநாடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அதைவிடமுக்கியமானவிடயம்தமிழரசுக்கட்சிகள் இரண்டாக உடைந்து இருக்கிறது. அது இரண்டா, மூன்றாகவாஎன்றுதெரியவில்லைஆனால்உடைந்து இருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தலைவர் எடுக்கும் முடிவை மற்றொரு குழு எதிர்க்கும். ஆகவே, தமிழ் அரசுக் கட்சி ஒற்றுமையாக வேண்டும். அதன் பின்னரே ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒற்றுமை பற்றி பார்க்கலாம்.

கடந்த காலத்தில் சம்பந்தனின் தலைமையின் கீழ் நாம் இணைந்திருந்தாலும் பல கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றன. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதியப்பட்ட வேண்டும் என வலியுறுத்தினோம். இதனால் சிலர் கூட்டமைப்பை விட்டுச் சென்றனர்.

இப்போது கூட்டமைப்பு மீண்டும் ஒற்றுமையாக வேண்டுமானால் அது பதிவு செய்யப்பட்ட கட்சியாக வேண்டும்.

பொதுவானசின்னம்இருக்கலாம். அதுவீடாகவும் இருக்கலாம். தமிழ் அரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு விட்டுக்கொடுக்கலாம்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டாலே கூட்டமைப்பு அர்த்தபுஷ்டியானதாக இருக்கும்.

நான் மட்டுமல்ல ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில்உள்ளபங்காளிக்கட்சித்தலைவர்களும் இதே நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம். - என்றார். (05)

# 30 தற்காலிக வர்த்தக நிலையங்கள் மாவனெல்ல பகுதியில் தீக்கிரை

மாவனெல்லநகரில் 30 தற்காலிக வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாகியுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவனெல்ல நகரின் பஸ் தரிப்பிடத்திற்கு பின்பகுதியில் உள்ள தற்காலிக கடைகளே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச்சம்பவம்ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

பொலிஸார், தீயணைப்புப் படையினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்.

தீபரவியமைக்கானகாரணம்கண்டறியப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மாவனெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வற் வரியைப் பதிவு செய்யாமல் நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் நிறுவனங்களை கண்டறிய நடவடிக்கை

வற் வரியைப் பதிவு செய்யாமல் அதனை நுகர்வோரிடமிருந்து வசூலிக்கும் நிறுவனங்களைக் கண்டறிய இறைவரி திணைக்களம் சோதனையில் ஈடுபட்டுள்ளதாக திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வற் வரிக்காக பதிவு செய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும்போது, அவர்களின் வற் பதிவு எண்ணை நுகர்வோரின்பார்வைக்குக்காண்பிக்க வேண்டியது கட்டாயமாகும்.

இவ்வாறு செயற்படாத வர்த்தக நிறுவனங்கள் தொடர்பில் இறைவரித் திணைக்கள ஆணையாளருக்கு வாடிக்கையாளர்கள் நேரடியாகவே முறைப்பாடு செய்யலாம்.

இதேவேளை, இது தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (05)

# தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்சபை கூட்டத்தின்போது கைகலப்பில் ஈடுபட்டோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## புதிய தலைவர் சிறிதரன் அதிரடி



இலங்கைத்தமிழரசுக்கட்சியின் 17 ஆவது தேசிய மாநாட்டின் பொதுச்சபைக் கூட்டத்தின் முதலாவது நாள் அமர்வின்போது பதவிநிலைத் தெரிவுகள் தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தக்கம் கைகலப்பில் முடிந்துள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து பொதுச்சபை உறுப்பினர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன எனக் கட்சியின் புதியதலைவர்சிவஞானம்சிறீதரன் அறிவித்துள்ளார்.

குறிப்பாக, பொதுச்செயலாளராக சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டதை அடுத்து கட்சியின் திருகோணமலை மாவட்ட பொதுச்சபையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் அதனைக் கடுமையாக விமர்சித்தார்கள். விசேடமாக மத்திய குழுவில் தீர்மானத்தை எடுத்ததன் பின்னர் அதனை அப்படியே ஏற்றுக்கொள்வதாக இருந்தால் பொதுச்சபையில் உறுப்பினர்களாக இருக்க வேண்டியதன் அவசியம் என்னவென்று கேள்விகளைத் தொடுத்தனர்.

இந்த நிலைமையில், வாய்த்தர்க்கம் கடுமையானதில் திருகோணமலை மாவட்டத்தின் ஒரு குழுவினர் தர்க்கம் செய்த குழுவினர் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர். இதனால் கைகலப்பு உருவாகியிருந்தது. பின்னர்நிலைமைகளைஏனைய உறுப்பினர்கள் கட்டுப்படுத்தியிருந்த நிலையில், குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய அனைவரின் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று புதிய தலைவர் சிறீதரன் பகிரங்கமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

# அதிவேக வீதிகளில் விபத்துகள் அதிகரிக்கக் காரணம் என்ன?

## விளக்குகிறார் வைத்தியர் சமிதா சிறிதுங்க

நேரத்தை மீதப்படுத்துவதைக் கருத்தில் கொண்டு அதிவேகமாக வாகனம் செலுத்துவதால் அதிவேக வீதிகளில் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என சுகாதார அமைச்சின் தொற்று அல்லாத பிரிவின் விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தலைவர் டாக்டர் சமிதா சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

மேலும் பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களைச் செலுத்துவதே இந்த விபத்துக்களுக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிவேக வீதிகளில் போக்குவரத்து விபத்துக்கள் ஒப்பீட்டளவில்அதிகரித்திருப்பதைநாங்கள் அவதானித்துள்ளோம்.

எனவே, அதிவேக வீதிகளில் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் சமித்த சிறிதுங்க தெரிவித்துள்ளார். (05)

# செல்லக்கதிர்காமத்தில் விபத்து: ஒருவர் இறப்பு; 4 பேர் படுகாயம்



கதிர்காமம் - செல்லக் கதிர்காமம் வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றும் லொறியொன்றும் மோதியே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தவிபத்தில்வானில் பயணித்த மேலும் 4 பேர் காயமடைந்துள்ளனர்எனப்பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

உயிரிழந்தநபர் வானில் பயணித்தவர் எனத் தெரிவிக்கும் பொலி-ஸார் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## யாருடைய பாதுகாப்புக்கு நிகழ்நிலை காப்புச் சட்டம்?

நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் நீதிமன்றம் குறிப்பிட்ட திருத்தங்கள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்று சட்ட மா அதிபர் திணைக்களத்தினர் பரிசோதித்த பின்னரே அதில் தான் கையெழுத்திடுவார் என்று சபாநாயகர் அறிவித்துள்ளார். உயர் நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்ட திருத்தங்களில் குறைந்தபட்சம் 13 திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று எதிர்க்கட்சியினர் நாடாளுமன்றத்திலேயே சுட்டிக்காட்டியிருந்தனர். இதனை அடுத்தே சபாநாயகர் இந்த நிலைப்பாட்டை எடுத்தார்.

18 செப்டம்பர் 2023 அன்று நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறுவுவதற்கானவரைவைஆடசியாளர்கள்அரசிதழ்(வர்த்தமானி) வழியாக வெளியிட்டனர். இது அக்டோபர் 3, 2023 அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. நாட்டின் அரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட' நிகழ்நிலை பாதுகாப்பு ஆணையத்தை' நிறுவுவதற்கு இந்தச் சட்டம் அனுமதி அளிக்கின்றது.

அண்மையில், 'வெரிடே ரிசர்ச்' அமைப்பு நடத்திய ஒரு கணக்கெடுப்பின்படி, 56% பேர் ஆன்லைன் பாதுகாப்புச் சட்டம் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களின் சுதந்திரத்தைக் குறைக்கும் என்று கூறியுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட அறிக்கைகள் மற்றும் அவதூறான கட்டுரைகளால் ஏற்படும் சேதங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவும், தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக ஆதாரமற்ற நிகழ்நிலைக் கணக்குகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் இந்த சர்ச்சைக்குரிய சட்டத்தை கொண்டு வருவதாக ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அவதூறுகளைப் பரப்பும் இணையத் தளங்கள் மற்றும் சமூக ஊடகங்களை 'தவறான அறிக்கைகளை பரப்புவதற்கான இணையவழி இருப்பிடங்கள்' என்று இந்தச் சட்டத்தின் மூலம் அடையாளப்படுத்த முடியும்.

ஒரு நபர் நிகழ்நிலைக் கணக்குகளில் இடுகையிடுவதையோ அல்லதுபகிருவதையோகுற்றமாக்க இந்தச்சட்டத்திற்குஅதிகாரம் உள்ளது. அதற்காக 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும் இந்தச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படமுயும்.

முன்மொழியப்பட்ட சட்டத்தில் உள்ள 31 விடங்களைத் தனிப்பெரும்பான்மையுடன் நிறைவேற்ற உச்சநீதிமன்றம் தீர்மானித்தது. இல்லையெனில், அதன் அசல்நிலையில், அதை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு சிறப்புப் பெரும்பான்மை தேவைப்பட்டது.

நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பு இந்தச் சட்டத்தை தனிப் பெரும்பான்மையுடன்தான் நிறைவேற்றியுள்ளது.

'நிகழ்நிலை காப்புச் சட்டம்' குறித்து எழுதும் பிரபல கட்டுரையாளர் ஒருவர், இந்த நாட்டின் சட்டத்தின் ஒரு பகுதியை ஆக்குவதற்கு வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாங்கள் ஆதரித்த மசோதாவை உண்மையிலேயே புரிந்து கொண்டார்களா என்று வினவியுள்ளார். அவரது கேள்வி சரியானதுதான். ஏனெனில் தற்போது ஆளும் தரப்பாக இருக்கும் இவர்களால் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தச் சட்டம் நாளை இவர்கள் எதிர்க் கட்சியனராகும்போது அவர்களையும் முழுமையாகக் கட்டுப்படுத்தும் என்பதை மறந்துவிட்டார்கள்.

விமர்சனங்களை ஒடுக்கும் முயற்சியாகக் கருதப்படும் இந்தச் சட்டத்தை நாட்டில் உள்ள அனைத்து ஊடக வெளியீட்டு நிறுவனங்களும் எதிர்த்தன. பல சமூக அமைப்புக்களும் எதிர்த்தன. ஆனாலும் ஆளும் தரப்பினர் சட்டத்தை அரையும் குறையுமாக நிறைவேற்றியுள்ளனர்.

தேர்தல்காலத்தில்ஆளும்தரப்பினருக்குஎதிரானபரப்புரைகள் சமூக ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படக்கூடாது என்பதன் காரணமாகவேஆளும்தரப்புஇந்தச்சட்டத்தைஅவசரஅவசரமாக நிறைவேற்றியது என்பது வெளிப்படையானது. அதேநேரம் தனது பரப்புரைகளுக்கும் ஆளும் தரப்பு இதே சமூக ஊடகங்களையே இன்று பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றது. எனவே இந்தச் சட்டத்தின் ஊடாக ஆளும் தரப்பினருக்கு வரப் பிரசாதமும் எதிர்த் தரப்பினருக்கு இடைஞ்சல்களும் ஏற்படும் என்பது வெளிப்படையானது. அதாவது இந்தச் சட்டத்திற்குப் புறம்பாக சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆளும் தரப்பினர் அதிகாரிகளால் கண்டுகொள்ளப்படாமல் விடப்படும் அதேநேரம் அவ்வாறு செயற்படும் எதிர்க் கட்சியினர் மீது உடனுக்குடன் சட்டம் பாயும் என்பதையும் எதிர்பார்க்கலாம். ஏனெனில் இலங்கையின் வடிமைப்பு அப்படிப்பட்டது.

இந்த நிலையில் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் யாருடைய பாதுகாப்புக்கானது என்ற கேள்வி எழுகின்றது.



## அரசு வேலைக்காக அலைமோதும் சீனர்கள்

**பிரட்றிக் கெல்டர்**

சீனஅரசுஆண்டுதோறும்நடத்தும்தேசியபொதுத் தேர்வாணையத் தேர்வில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றுவிட சீன இளைஞர்களிடையே போட்டி நிலவுகிறது. ஆண்டுதோறும் வெற்றிடமாம் ஆயிரக்கணக்கிலான அரசுப் பணியிடங்களை நிரப்ப, நல்ல மதிப்பெண் பெற்றவர்களின் பட்டியலிலிருந்து தேவைக்கேற்ப அரசு தேர்ந்தெடுத்து ஆட்களை நியமிக்கிறது. இந்த வேலைவாய்ப்பிலும் குறிப்பிட்ட சதவீதம், உடனடியாக பட்டம் பெற்று வேலை தேடுவோருக்காக ஒதுக்கப்படுகிறது.

சமீபத்தில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற 22 வயது டூஷின் கடந்த டிசெம்பரில் தேர்வெழுதினார். அந்தத் தேர்வுக்காக அவர் ஆறு மாதங்கள் பல்வேறு புத்தகங்களைப் படித்து, பயிற்சிகளை மேற்கொண்டார். பல இளைஞர்கள் இந்தத் தேர்வுக்காக தமக்கெனத் தனியாக சில பயிற்றுநர்களையும் அமர்த்திக்கொள்கின்றனர்.

அரசு வேலைக்கு வர தேர்வெழுதுவோரின் பொது அறிவும், பிரச்சினைகளைத் தீர்க்கும்



அவர்களுடைய ஆய்வு மனப்பான்மையும் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது என்றும் தேர்வில் சோதிக்கப்படுகிறது. சமீப காலமாக, 'சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் அரசியல் சிந்தனைகள்' தொடர்பான கேள்விகளும் கேட்கப்படுகின்றன. சீனத்தை வளப்படுத்த அவருடைய எதிர்காலத் திட்டமென்ன என்பது போன்ற கேள்விகள் அங்கு சகஜம்.

இந்தத் தேர்வுக்காக பல மாதங்கள் படித்து, மாதிரித் தேர்வுகள் எழுதித் தயாராக இருந்தாலும் குறைந்த இடங்களுக்கு நிறையப் பேர் போட்டி போடுவதால் வடிகட்டல் அதிகம் இருக்கும் என்று டூஷினுக்குத்தெரியும். சீனத்தின் நூற்றுக்கணக்கான ஊர்களில் தேர்வெழுத அமர்ந்த லட்சக்கணக்கான இளம் பெண்களில் அவரும் ஒருவர்.

தேர்வெழுதுவோரில் 70 பேருக்கு ஒருவர்தான் தேர்ச்சி பெறுவார் என்பது அந்த ஆண்டு அவர் தேர்வெழுதியபோது இருந்த நிலை. இப்போது அது மேலும் தீவிரமாகி 77 பேருக்கு ஒருவர்தான் தேர்ச்சி பெறுகிறார். போட்டி அவ்வளவு கடுமையானது. அந்தத் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டதாக முடிவு வந்தபோது மகிழ்ச்சியின் உச்சத்துக்கே சென்றார் டூஷின்.

ஷிஜாசுவாங் நகர சீன கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அமைப்பாளராக வேலைக்கு சேர்ந்தார். (அங்கு கட்சி - ஆட்சி இரண்டுக்கும் வேறுபாடு கிடையாது.) இந்த ஆண்டு நவம்பர் இறுதியில் இந்தத் தேர்வெழுதியவர்கள் எண்ணிக்கை 30 லட்சத்தைத் தாண்டிவிட்டது.

அரசில் வெற்றிடமாகும் வேலையிடங்கள் குறைந்துகொண்டேவருகின்றன, தேர்வெழுதுவோர் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது. இதனால் தேர்வில் கடும் போட்டி நிலவுகிறது. தேர்ச்சி பெறுவது கடினம் என்றாலும் ஏன் இத்தனை லட்சம் பேர் போட்டி போடுகின்றனர் என்று டூஷின் விளக்குகிறார்.

அரசு வேலைவாய்ப்புதான் இப்போது நிலையாக இருக்கிறது. சீன அரசு வேலைவாய்ப்பை அந்நாட்டு மக்கள் 'இரும்புக் கலயத்தில் வைக்கப்பட்ட சோறு' என்கின்றனர். அதாவது அந்தக் கலயத்தைப் போலவே, வேலையும் உறுதியானது என்று பொருள்.

டூஷின் கூறுகிறார், பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவுடன் அடுத்து என்ன என்று தீர்மானிக்க முடியாமல் தவித்தேன். நிரந்தரமான வேலை வேண்டும். அத்துடன் என்னுடைய பொழுதுபோக்கு கலைகளைத் தொடர, போதிய ஓய்வு நேரமும் தினமும் கிடைக்க வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு அரசு வேலைவாய்ப்புதான் சரி என்று தீர்மானித்தேன். தனியார் துறையைவிட அரசுத் துறையில் ஊதியம் அவ்வளவு அதிகமில்லை, ஆனால், ஓய்வூதியம் உள்ளிட்ட வேறு பயன்கள் அதிகம். சிறப்பாக வேலை செய்தால் கூடுதலாக ஊதியம் (போனஸ்) பெறலாம். ஓய்வுபெறும் வயதை எட்டும் வரையில் தொடர்ந்து வேலை பார்க்க முடியும் என்ற நிரந்தரத் தன்மை உள்ளது. அது மட்டுமல்லாமல் அரசு ஊழியர் என்றாலே தனி மரியாதைதான்.

நிரந்தர வேலை, சமூகத்தில் மதிப்பு என்பதுடன் லட்சக் கணக்கானவர்கள் எழுதும் தேர்வில் தேர்ந்தெடுக்கப்படுவதைத் தங்கள் பிள்ளையின் அறிவுக் கூர்மையை அரசே தேர்வு மூலம் அங்கீகரித்துவிட்டது என்று பெற்றோரும்பெருமைப்படுகின்றனர். அரசு வேலையிலேயே மிகவும் முக்கியமானது வேலை நேரம்தான் என்கிறார் டூஷின்.

அரசு அலுவலக ஊழியர்கள் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை, வாரத்தில் ஐந்து நாள்கள் வேலை பார்த்தால் போதும். தனியார் நிறுவனங்களில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையில் வாரத்துக்கு ஆறு நாள்கள் வேலை செய்தாக வேண்டும். என் மனதுக்குப் பிடித்த பொழுதுபோக்கு வேலைகளைச் செய்ய அரச வேலையில் நிறைய நேரம் கிடைக்கிறது என்கிறார் டூஷின்.

### நிபுணரின் கருத்து

சீன அரசின் தேர்வாணையத் தேர்வுகளில் ஆண்டுதோறும் லட்சக்கணக்கானவர்கள் தேர்வெழுதுவதில் வியப்பேதும் இல்லை என்கிறார் யாங் ஜியாங். இவர் சீன அரசின் பொருளாதாரக் கொள்கைகளை ஆராய்ந்து வருகிறவர். சர்வதேச ஆய்வுகளுக்கான டென்மார்க் நாட்டு அமைப்பில் இப்போது பணிபுரிகிறார். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை லட்சக்கணக்கில் இருப்பதால் பட்டம் பெற்றவுடன் தேர்வு எழுத ப்வருவோரின் எண்ணிக்கையும் அதே அளவுக்கு நேர்விகிதத்தில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறார்.

2023இல்மட்டும்1.16கோடிஇளைஞர்கள்படித்துப் பட்டம் பெற்றுள்ளனர். இதுதான் சீன வரலாற்றில் அதிகபட்சம். ஆனால் அரசு வேலைக்கு அதிகம் பேர் விண்ணப்பிக்க இது மட்டும் காரணமில்லை; சீன நாட்டின் பொருளாதார நிலையும் ஒரு காரணம். சீனாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் இப்போது நிச்சயமற்ற நிலையில் ஊசலாடுகிறது என்கிறார்.

கடந்த ஜூனில், படித்து வேலை தேடும் இளைஞர்களிடையே வேலைவாய்ப்பின்மை அளவு 21.3% ஆக இருக்கிறது. இது கவலையளிக்கும்

(8ஆம் பக்கம் பார்க்க...)

# புதிய உண்மை ஐக்கிய நல்லிணக்க ஆணைக்குழு நம்பகத்தன்மை மிக்கதாக இலங்கையில் இல்லை

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

போர்க்கால மனித உரிமைமீறல்களை துஸ்பிரயோகங்களை விசாரிப்பதற்கான மற்றுமொரு அமைப்பை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம்முன்வைத்துள்ள சட்டமானது முன்னைய தோல்வியுற்ற முயற்சிகளைப் பிரதிபலிப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைப்புறக்கணிப்பதாகவும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றாததாகவும் காணப்படுகின்றது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஆயுதமோதல்கள்முடிவிற்குவந்த15வருடங்களின் பின்னரும் இலங்கை பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களை மௌனமாக்கும் ஒடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற குறைந்தளவு கலந்தாலோசனைகளின்பின்னர்உண்மைஐக்கியம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கான சட்ட மூலம் 2024 ஜனவரி முதலாம் திகதி வெளியானது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப்புலிகளுடன் 1983 முதல் 2009 வரை இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் யுத்த குற்றங்களை விசாரணை செய்வதாக அரசாங்கம் உறுதிமொழி வழங்கியிருந்தது எனவும் தெரிவித்துள்ளது.

1988-89 ஆம் ஆண்டுகால பகுதியில் இடதுசாரி ஜேவிபியின் கிளர்ச்சியின் போது இடம்பெற்ற பரந்துபட்ட துஸ்பிரயோகங்களை அரசாங்கம் தவிர்த்திருந்தது எனவும் தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் உண்மை நீதி பரிகாரம் போன்றவற்றை வழங்குவதற்கு பதில் உத்தேச சட்டமூலம் போதியளவு பொறுப்புக்கூறல் இன்மை மற்றும் அநீதிகுற்றங்கள் தொடர்பான சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களை திசைதிருப்புவதை நோக்கமாக கொண்டது எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை குறித்து ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை ஆராய்வதை முடிவிற்கு கொண்டுவரும் நோக்கத்துடனும் இலங்கை இந்த சட்டமூலத்தை கொண்டுவந்துள்ளது எனவும் சர்வதேசமனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. (05)

# மூதாட்டியின் இறப்பு;; 15 வயது பேரன் கைது

பெலியத்தை பகுதியில் மூதாட்டி ஒருவரின் மரணம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் அவரது பேரன் பெலியத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 15 வயதுடைய பாடசாலை மாணவன் எனவும்இவர்பாடசாலையின்மாணவ தலைவனாகவும் செயற்பட்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 17ஆம் திகதி குறித்த மாணவனின் பாட்டி வீட்டில் உயிரிழந்துள்ளதுடன் இது தொடர்பில் பேரன் கிராம அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

கிராம அதிகாரியின் அறிவுறுத்தலின்படி பேரன் தனது பாட்டி இறந்துவிட்டதாக பெலியத்தை பொலிஸாரிடம் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

உயிரிழந்த மூதாட்டியின் இறுதிச்சடங்கு கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. குறித்த பெண் உயிரிழப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அயல் வீட்டில் தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

கடந்த 30 திகதி இந்த சம்பவம் இடம்பெற்ற நிலையில் இது தொடர்பில் மூதாட்டியின் பேரனிடம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர் .

பொலிஸாரின் விசாரணையில் தானேதங்கநகைகளைத்திருடியதாகப் பொலிஸாரிடம் ஒப்புக்கொண்டார்.

மேலும் இவருடைய மூதாட்டியின் கழுத்தில் இருந்த தங்க நகையையும் தான் திருடியதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்திருத்தார்.

இவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவருடைய தகவலுக்கமைய அயல் வீட்டில் திருடப்பட்ட தங்க நகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில்குறித்தமூதாட்டியின் மரணம் தொடர்பில் பொலிஸாருக்கு சந்தேகம் எழுந்துள்ள நிலையில் பேரன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து உயிரிழந்த மூதாட்டியின் சடலம் திங்கட்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது .

இந்தசம்பவம்தொடர்பில்பெலியத்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# முல்லைத்தீவு பட்டத் திருவிழாவில் பறந்த தமிழீழப் வடிப பட்டம் குறித்து விசாரனை


முல்லைத்தீவு கடற்கரையில் பட்டத்திருவிழா ஞாயிற்றுக்கிழமை மாலை சிறப்புற இடம்பெற்றது.

வல்வெட்டித்துறையில் வருடாவருடம் பட்டத்திருவிழா மேற்கொள்ளுபவர்களால் முல்லைத்தீவு கடற்கரையில் ஞாயிற்றுக்கிழமை பட்டத்திருவிழா முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன்போது, வித்தியாசமான வடிவில் பட்டங்களை உருவாக்கி சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பட்டம் ஏற்றி மகிழ்ந்திருந்தனர்.

குறித்த பட்ட திருவிழாவில் முல்லைத்தீவினை சேர்ந்த இளைஞர் ஒருவர் பட்டத்தில் தமிழீழ வரைபடம், கார்த்திகை பூவின் பட அமைப்பில் உருவாக்கப்பட்ட பட்டத்தை ஏற்றியுள்ளார்.

இதனை தாம், அவதானித்தாக கூறி முல்லைத்தீவு பொலிஸார் அவ் இடத்திற்கு சென்று குறித்த இளைஞனை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர். (05)








கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 990/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhopees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

## யாழ். மயிலிட்டி கடலில் ஆபத்தான படகுப் பயணம் மேற்கொண்ட இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவர் மீட்பு

யாழ்ப்பாண கடற்பகுதியில் ஆபத்தான படகுப் பயணத்தில் ஈடுபட்டிருந்த இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவரைகடற்படையினர் மீட்டு கரை சேர்த்துள்ளனர்.

மயிலிட்டி கடல் பகுதியில் சனிக்கிழமைகுடும்பஸ்தர்ஒருவர் தனது 2 வயது பிள்ளையையும், தனது சகோதரியின் 7 வயது மகளையும் படகில் ஏற்றி கடலில் ஆபத்தான முறையில் படகை செலுத்தியுள்ளார். அவ்வேளை, படகினுள் கடல் நீர் புகுந்ததுடன், படகில் இருந்த பிள்ளைகளும் பயத்தில் கத்தியுள்ளனர்.

அவர்களது சத்தம் கேட்டு, கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், குறித்த இடத்துக்கு விரைந்து, படகில் இருந்த இரு பிள்ளைகளை மீட்டதுடன், படகினை கரைக்கு செலுத்துமாறு குடும்பஸ்தருக்கு உத்தரவிட்டனர். அத்தோடு, குடும்பஸ்தரைக் கடுமையாக எச்சரித்த கடற்படை யினர், இரு பிள்ளைகளையும் பாதுகாப்பாகக் கரை சேர்த்தனர். (05)

## மலையக ரயில் பாதையில் சேவைகளை வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை

மலையக ரயில் பாதையில் கொட்டகலை மற்றும் ஹற்றன் ரயில் நிலையங்களுக்கு இடையில் ஞாயிற்றுக்கிழமை ரயில் தடம் புரண்டமையால் ஏற்பட்டுள்ள தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி ரயில்வே கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுதிரைப்படம்ஒன்றின்படப்பிடிப்புக்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருந்த குறித்த விசேட ரயில் ஞாயிற்றுக்கிழமை மாலை மீண்டும் கொழு-ம்பு கோட்டைக்கு சென்று கொண்டிருந்த போதே தடம்புரண்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு அறை கூறுகிறது. (05)

## நண்பர்களுடன் அமர்ந்திருந்து ரயில் பாதையில் அரட்டை அடித்த மாணவன் ரயில் மோதிச் சாவு

ரயில் பாதையில் நண்பர்கள் குழுவுடன் அமர்ந்து அரட்டை அடித்துக்கொண்டிருந்த 16 வயதுடைய பாடசாலை மாணவர் ஒருவர் பூஸா ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலால் மோதப்பட்டு படுகாயமடைந்து காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக ரத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பூஸா வெல்லபட பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர் ஒருவரே காயமடைந்துள்ளார். தனது நண்பர்கள் ஆறு பேருடன் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது காலியிலிருந்து அளுத்கம நோக்கி சென்று கொண்டிருந்த ரயிலால் இந்த மாணவன் மோதப்பட்டான். (05)

## கடத்தப்பட்ட மீன்பிடிப் படகை மீட்டெடுக்க பஹ்ரைனிடம் உதவி கேட்கிறது இலங்கை

சோமாலியகடற்கொள்ளையர்களால்கடத்தப்பட்ட இலங்கைமீனவப் படகான லோரன்சோ புத்தாவை விடுவிக்க பஹ்ரைனில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கூட்டு கடற்படையின் உதவியைக் கோரும் இலங்கை கடற்படை கோரியுள்ளது. 6 மீனவர்களுடன், அரபிக்கடலில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் இந்த மீன்பிடிப்படகு கடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.(05)

## அரச நிர்வாக சேவை அதிகாரிகள் சுகவீன விடுமுறைப் போராட்டம்

அரசநிர்வாகசேவைஅதிகாரிகளும் நேற்று (திங்கட்கிழமை) முதல் சுகவீன விடுமுறை போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

பலகோரிக்கைகளைமுன்வைத்து குறித்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அனைத்து அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் பேச்சு ஒன்றுநடைபெறவுள்ளதாகவும் அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் தலைவர் எச்.ஏ.எல் உதயசிறி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கூறிய அரச நிர்வாக சேவை அதிகாரிகளின் ஒன்றிணைந்த கூட்டமைப்பின் தலைவர் எச்.ஏ.எல் உதயசிறி,

கூட்டுக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரிகள், நாடளாவிய, இணையான சேவைகள் மற்றும் திணைக்கள சேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளனர். அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளின் சங்கம், உள்நாட்டு இறைவரி தொழிற்சங்க ஒன்றியம், கல்வி நிர்வாக சேவை தொழிற்சங்க ஒன்றியம் உள்ளிட்ட 17 தொழிற்சங்கங்கள் கொழும்பில் ஒன்றுகூடி பேச்சு நடத்தவுள்ளன. (05)

## மீரிகமவில் கோரவிபத்து: பெண் பொலிஸ் இறப்பு




மீரிகம - பஸ்யாலை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பேபுஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த வரகாப்பொல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 52 வயதான பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மீரிகமவில்இருந்துபஸ்யாலை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் அதே திசையில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளை கடந்து செல்லும்போது எதிர்த்திசையில்வந்தகனரகவாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார்.

விபத்துக்குள்ளாக பெண் பொலிஸ் உத்தியோகத்தியாகத்தர்வட்டுபிட்டிவல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர் .

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்


(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்





தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி

முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை

தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு

மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி

உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்

தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்

சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-

பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



காலைக்கதிர் Kalaikkathir

## அரைவாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுசெய்யப்பட்டுள்ளது. ஆனாலும் ஏனைய பயிர் உற்பத்திகளை ஊக்குவிப்பதோடு, இந்த 4 வகைப் பயிர்களை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளோம்.

பெரிய வெங்காய பயிர்ச் செய்கையுடன், சின்ன வெங்காய உற்பத்திவீழ்ச்சியடைந்தது. எனவே, இந்த ஆண்டு மீண்டும் சின்ன வெங்காய பயர்ச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதன்படி, மொணராகலை, தெலுல்ல, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் மொரகொல்லாகம, நியந்தகம ஆகிய இடங்களில் சின்ன வெங்காயச் செய்கையை பிரபலப்படுத்ததீர்மானித்துள்ளோம்.

இதற்கு இணையாக பெருந்தோட்டத் துறையில் பல முக்கியதீர்மானங்களைஇவ்வருடம் நடைமுறைப்படுத்துகின்றோம். அதன் முதல் கட்டத்தை கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் தொடங்கியுள்ளோம். அதன்படி, தேயிலைகொழுந்துகளின்தரத்தை மேம்படுத்துவதற்காக பி - 60 கொள்கை அமுல்படுத்தப்பட்டது.

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னைப் பயிர்ச்செய்கைக்கு இரண்டுஅரசஉரநிறுவனங்களின் மூலம் உரங்களை மானிய விலையில்வழங்கும்திட்டத்தையும் தொடங்க உள்ளோம். இதன் கீழ் தேயிலைக்காக தயாரிக்கப்பட்ட விசேட உரம், மானிய விலையில் வழங்கும்நடவடிக்கை தொடங்கப் பட்டுள்ளது.

தேயிலை விளைச்சலை அதிகரிப்பதற்காக, அனைத்து தேயிலை உரங்களையும் அரசுக்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களான கொமர்ஷல் உர நிறுவனம் மற்றும் லங்கா உர நிறுவனம் மூலம் உற்பத்தி செய்ய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில்அமைச்சுநடவடிக்கை எடுத்துள்ளது.

மிகஉயர்ந்ததரமானதேயிலை உரம் அரசுகு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களாலும் உற்பத்தி செய்யப்பட்டு, தேயிலை விவசாயிகளுக்கு வழங்கப் படும். இதன்படி தேயிலை விவசாயிகளுக்குத் தற்போது வற் வரியுடன் விற்பனை செய்யப்படும் தொகையை விட 2,000 ரூபா குறைந்தவிலையில்இந்தஉரத்தை வழங்குவோம். இந்த விலை குறைப்பு சந்தை விலையுடன் ஒப்பிடும் போது சுமார் 50 சதவீதம் குறைப்பு என்று கூறலாம்.

இதன்படி, ரி-200 மற்றும் ரி--750தேயிலைஉரமூட்டைஒன்றின் விலை 5,500 ரூபாவாகவும், யு--709 மற்றும் யூ-834 தேயிலை உரத்தின் விலை 7,735 ரூபாவாகவும்குறைக்கப்படவுள்ளது. மேலும், உரங்களை முறையாகப் பயன்படுத்துவதுடன், புதிய பயிர்ச் செய்கை தொழில்நுட்பமும் நமது தேயிலை உற்பத்திக்கு அறிமுகப்படுத்தப்படும்.

அதிக அடர்த்தி பயிர்ச்செய்கை முறையின் கீழ் 59 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. அதில் 55 திட்டங்கள் மிகவும் வெற்றிகரமானவை. ஒரு மாதத்தில் ஒரு ஏக்கரில் சுமார் 1,350 கிலோ தேயிலைகொழுந்துகளைஅறுவடை செய்கின்றனர். இந்த ஆண்டு இத்திட்டத்திற்காக1,000 மில்லியன் ரூபா செலவிட உள்ளோம்.

மானிய விலையில் தேயிலை உரம் வழங்குவதற்கான முத்தரப்பு ஒப்பந்தம் இன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்படி, இலங்கை தேயிலை சபை மற்றும் சிறியதேயிலைத்தோட்டஅபிவிருத்தி அதிகார சபை ஆகியன அரசுக்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களுடன்ஒப்பந்தங்களை மேற்கொண்டன. இலங்கையில் தேயிலை பயிர்ச் செய்கையின் விளைச்சலை அதிகரிப்பதற்கான அரசின் வேலைத்திட்டத்திற்கு இந்த மானிய விலையில் உரம் வழங்குவது பெரும் உதவியாக இருக்கும் என நான் நம்புகிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தொலைநோக்கு அரசியல் பார்வையினால் இவ்வாறான நடவடிக்கைகள்சாத்தியமாகியுள்ளன. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுகமத்தொழில்அமைச்சுடன் இணைக்கப்படாவிட்டால் இந்த வேலைத்திட்டத்தைஅமுல்படுத்துவது சாத்தியமற்றது என்றார்.



# பொதுமக்களின் உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களைப் பொலிஸாருக்கு வழங்காதீர்

## மனித உரிமை ஆணைக்குழு நீதியமைச்சருக்கு கடிதம்

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் மூலம் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்கவேண்டாம் என இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்த தனது அவதானிப்புகள் தொடர்பாக இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு கடிதமொன்றை எழுதியுள்ளது. பயங்கரவாதக் குற்றம் என்பதற்கானவரைவிலணக்கணத்தை கணிசமான அளவில் குறைக்கவேண்டும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி பயங்கரவாத குற்ற சந்தேகநபருக்கு எதிராக பிறப்பிக்கப்படும் தடுப்பு உத்தரவு நீதித் துறையின் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுவதை உறுதிசெய்யவேண்டும் எனவும் மனித உரிமை ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

பயங்கரவாத குற்றச்செயல்கள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட எந்த சந்தேகநபருக்கும் எந்த நேரத்திலும் பிணை வழங்கும் அதிகாரம் நீதிபதிகளிற்கு வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் சட்டத்தின் உதவியை நாடுவதற்கான உரிமை வழங்கப்படுவதை உறுதி செய்யவேண்டும் என தெரிவித்துள்ள இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு இந்த உரிமையை கண்மூடித்தனமான நியாயமற்ற நிபந்தனைகள் இன்றி வழங்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை கட்டுப்படுத்தும் அதிகாரங்களை பொலிஸாருக்கு வழங்கவேண்டாம் எனவும் இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு நீதியமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(05)

# விளையாட்டு அமைப்புக்களின் இடைக்கால குழுக்கள் கலைப்பு

இலங்கை கராத்தே சம்மேளனம் மற்றும் இலங்கை மோட்டார் விளையாட்டு சங்கங்கள் ஆகியவற்றின் இடைக்கால குழுக்களை கலைத்து விளையாட்டு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

கடந்த வருடம் ஜூலை மாதம் 28ஆம் திகதி அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க, கராத்தே சம்மேளனத்தின் பதிவை இடைநிறுத்தி, சங்கத்தின் பணிகளை தற்காலிகமாக முன்னெடுப்பதற்கு இடைக்கால குழுவை நியமித்தார்.

இது தொடர்பான வர்த்தமானியை தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் இரத்துச் செய்து, கராத்தே சம்மேளனத்தின் விவகாரங்கள் தொடர்பில் கையாள கடந்த தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(05)

# இனவாத, மதவாத குடும்ப அரசியலிலிருந்து விடுபட்டு தூய்மையான ஜனநாயகக் கலாசாரத்தை வளர்க்குக!

## மஹிந்த தேசப்பிரிய அறிவுரை









எதிர்காலத்தில் இலஞ்சம் மற்றும் ஊழலற்ற தூய்மையான அரசியல் கலாசாரத்துக்கு இளைஞர்களைத் தயார்ப்படுத்துவதுடன், இனவாத, மதவாத குடும்ப அரசியலில் இருந்து விடுபட்டு ஒரு தூய்மையான ஜனநாயகக் கலாசாரத்தை இளைஞர்களுக்கிடையில் வளர்த்தெடுக்க வேண்டும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் முன்னாள் தேர்தல் ஆணையாளருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் அமைப்பினர் ஏற்பாடு செய்த மாகாண சபைகளை வலுப்படுத்தல் தொடர்பாக இளைஞர், யுவதிகளுக்கு விளக்கமூட்டும் செயலமர்வு மட்டக்களப்பில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு விளக்கமளிக்கும்போதே மஹிந்த தேசப்பிரிய இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயக இளைஞர் காங்கிரஸ் தலைவர் கே.அர்ஜூனா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது மஹிந்த தேசப்பிரிய இளைஞர், யுவதிகள் மற்றும் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார். மேலும், எதிர்கால இளைஞர்களின் அரசியலில் அவர்களது பங்களிப்பு மற்றும் தேர்தல்களின் முக்கியத்துவம் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

(05)

# இலங்கை மீன்பிடிப் படகுகள் 2 மாலைதீவில் கைப்பற்றப்பட்டன

## 13 மீனவர்களும் கைது

மாலைதீவு கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு இலங்கை மீன்பிடி படகுகள் அந்நாட்டு கரையோர பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த இரு மீன்பிடிப் படகுகளிலும் காணப்பட்ட 13 மீனவர்களும் மாலைதீவு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த இரண்டு மீன்பிடி படகுகளும் கடந்த 25 ஆம் திகதி கைப்பற்றப்பட்டன.

இந்த இரண்டு படகுகளும் கடந்த 25 ஆம் திகதி கைப்பற்றப்பட்டு 'ஹா அலிஃப்ஃபில்லாட்ஹூ' என்ற துறைமுகத்தில் கடலோரக் காவல்படையின் கட்டுப்பாட்டில் இருப்பதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (05)

# தங்காலை மீன்பிடி துறைமுகத்துக்கு அருகில் பெண்ணின் சடலம் மீட்பு

அம்பாந்தோட்டை - தங்காலை மீன்பிடி துறைமுகத்துக்கு அண்மித்த கடலில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக தங்காலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் ரன்னதலுன்ன பிரதேசத்தில் வசிக்கும் 32 வயதுடைய ஒரு பிள்ளையின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரின் மரணம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தங்காலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஜனாதிபதி நிதியத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில் தொகை அதிகரிப்பு

2021 (2022) ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றி ஒரே தடவையில் சித்தியடைந்து 2024 ஆம் ஆண்டில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள, பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள மாணவர்களுக்கு வழங் கப்படும் புலமைப்பரிசில் கொடுப் பனவை 2024 பெப்ரவரி மாதம் முதல் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கு மாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். மாணவ, மாணவிகளின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும், கற்கும் திறன் கொண்ட, ஆனால் பொருளாதாரச் சிரமங்களுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களின் எதிர்காலத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி நிதியம் இந்த புலமைப்பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது.

2021ஃ2022 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ், ஜனாதிபதி நிதியத்தால் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதுடன் இதுவரை 10 மாதாந்த தவணைகள் செலுத்தப்பட்டுள்ளன. இதன்படி, புலமைப்பரிசில் தொகை அதிகரிப்புடன், 2024 பெப்ரவரி முதல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வரை ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் ஜனாதிபதி நிதியிலிருந்து 6,000 ரூபா மாதாந்த உதவித்தொகை வழங்கப்படும்.

மேலும் 2022ஃ2023 ஆண்டு தொடர்பாக க.பொ.த சாதாரண தர பரீட்சையில் உயர் தேர்ச்சி பெற்ற 5,000 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த மாணவர் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் வரை மாதாந்தம் ரூ. 6000 தொகையை வழங்குவதற்காக ஜனாதிபதி நிதியம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதன்படி, இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் தற்போது பிராந்திய மட்டத்தில் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன், தெரிவுகள் நிறைவடைந்தவுடன் உரிய மாணவ மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் வழங்க எதிர்பார்க்கப்படுகிறது. (05)

# வெள்ளவத்தைக் கடல் பகுதிக்கு செல்லும் மக்களுக்கு எச்சரிக்கை

*வெள்ளவத்தை ரயில் நிலையத்தை அண்மித்த கடல் பகுதிக்கு செல்லும் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*குறித்த பகுதியில் முதலை ஒன்று சுற்றித்திரிவது அவதானிக்கப்பட்டுள்ள நிலையிலேயே பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.*

*இது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கும் அறிவிப்பு பலகை ஒன்றும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது .*

*பாடசாலை விடுமுறை என்பதால் அதிக எண்ணிக்கையிலானோர் குறித்த கடல் பகுதிக்கு செல்வதுடன் சிலர் தங்கள் பிள்ளைகளுடன் நீராடுகின்றனர்.*

*எனினும் அந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சாவடியில் கடமையாற்றும் பொலிஸார் கடற்கரைக்கு வரும் மக்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தியுள்ளனர்.*

*இதனால் அங்கு செல்பவர்கள் அதிக கவனத்துடன் செயற்பட வேண்டும் என பொலிஸார் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (05)*

JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern

ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide

DOWNLOAD PASSENGER APP:

ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store

வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!

DOWNLOAD DRIVER APP:

jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install

YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store

SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213

# அரசு வேலைக்காக...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விதத்தில் இருப்பதால் அரசு இந்தத் தரவுகளை வெளியிடுவதைநிறுத்திவிட்டது.தனியார்துறையிலும் வேலைவாய்ப்புகள் சரிந்துவருகிறது என்பதை ஜியாங் சுட்டிக்காட்டுகிறார்.

சீனத்தின் எல்லா நகரங்களிலும் இப்படி ஆயிரக்கணக்கான படித்த இளைஞர்கள் வேலை கிடைக்காமல் அவதிப்படுவது நாட்டின் சமூக -அரசியல் சூழலுக்கே நல்லதில்லை என்று அரசியல் பார்வையாளர்கள் பலரும் அஞ்சுகின்றனர். படித்து வேலை கிடைக்காத இளைஞர்களை கிராமப்பகுதிகளின் வளர்ச்சி திட்டங்களில் ஈடுபடுத்த வேண்டும் என்று குவாங்செள மாநில கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பு ஒரு திட்டத்தை கடந்த மார்ச் மாதம் ஆட்சியாளர்களுக்கு அனுப்பியிருக்கிறது.

இது பழைய தலைமுறையினருக்கு சீனத்தின் ஈடு இணையற்ற தலைவராக மாசேதுங் இருந்தபோது அறிமுகப்படுத்திய 'கலாச்சாரப் புரட்சியை' நினைவூட்டுகிறது. 1960மீ1970களில் அரசியல் சமூக கொந்தளிப்புகள் ஏற்பட்டபோது, நகர்ப்புற இளைஞர்களை கிராமப்புறப் பகுதிகளின் வளர்ச்சித் திட்டத்தில் ஈடுபடுத்த அரசு கட்டாயப்படுத்தி அனுப்பியது. அப்போது என்ன நடந்தது என்பதை அரசு அதிகாரப்பூர்வமாக தெரிவிக்காவிட்டாலும் அரசின் திட்டத்தை ஏற்காத அல்லது எதிர்த்தவர்களில் இருபது லட்சத்துக்கும்மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக செய்திகள் வந்தன. இப்போதும் அப்படியாகிவிடுமோ என்ற அச்சம் பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

சீனத்தின் கிராமப்புறங்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்ட படித்த இளைஞர்களை கிராமங்களுக்கு அனுப்ப வேண்டும் என்று அதிபர் ஜி ஜின்பிங் கடந்த ஜனவரியில் பேசினார். நவீன காலத்தில் இப்படிப்பட்ட திட்டங்களால் பெரிய பயன் இருக்காது என்கிறார் லியோ. வேலைகிடைக்காத இளைஞர்கள் லட்சகக்கணக்கில் இருக்கிறோம், ஆண்டுதோறும் இந்த எண்ணிக்கை வளர்ந்துகொண்டே இருக்கிறது. ஏதாவது திட்டத்தை சொல்லி எங்களை மற்றவர்களின் பார்வையிலிருந்து மறைத்துவிட முடியாது" என்கிறார் லியோ.

உலகம் எங்குமே அரசுப் பணிகளுக்கான மவுசு அதிகரித்தபடிதான் இருக்கிறது.

**ஊ அல் ஜஸீரா**

# சீனாவின் பங்களிப்பில் 1,996 வீடுகளின் நிர்மாணத் திட்டத்தை துரிதப்படுத்துக

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பணிப்புரை



சீன அரசாங்கத்தின் உதவியுடன் குறைந்த வருமானம் பெறுவோர், படைப்பாற்றல் கலைஞர்கள் மற் றும் ஊடகவியலாளர்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 1,996 வீடுகளின் திட்டத்தை துரிதப்படுத்துமாறு அதிகாரிகளுக்கு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் அவர், எதிர்வரும் மார்ச் மாத தொடக்கத்தில் இங்கு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதற்கு முன்னதாக சீன அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர், இந்தத் திட்டத்தின் ஆரம்பப் பணிகளை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை வழங்கினார்.

நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்றாண்டுகளில் நிர்மாணிக்கப்படும் இந்த 1,996 வீடுகளில் 1,888 வீடுகள் கொழும்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கும், 108 வீடுகள் இந்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் ஒதுக்கப்படும்.

இதன்படி, பேலியகொடை துடுகெமுனு வீதியில் 615 வீடுகள், தெமட்டகொட எழுமடுவ தோட்டத்தில் 586 வீடுகள், மொரட்டுவ பெட்டரி தோட்டத்தில் 575 வீடுகள், மஹரகம அம்பவத்தையில் 112 வீடுகள் மற்றும் கொட்டாவ பழத்துருவத்தயில் 108 வீடுகளும் கட்டப்படவுள்ளன.

கொட்டாவபழத்துருவத்தயில்கட்டப்படவுள்ள108 வீடுகளும் கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்துக்கு சீன அரசாங்கம் 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்குகிறது. இது இலங்கை நாணயத்தில் சுமார் 24.48 பில்லியன் ரூபாவாகும். இந்த வீடமைப்புத் திட்டம் 08 இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், அதில் இரண்டு இடங்களுக்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது.

ஏனைய இடங்களில் இருந்த வெள;வேறு பிரச்சினைகள் காரணமாக அந்த இடங்கள் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவில்லை. அதேவேளை, அந்தப்பிரச்சினைகளுக்குத்தீர்வு கிடைத்ததால்அந்த இடங்களையும் அமைச்சரவைக்கு முன்வைத்து அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த வீடமைப்புத் திட்டம் நிர்மாணிக்கப்படுவதற்காக சீன அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 5 நிறுவனங்கள்ஒப்பந்தம்செய்துகொள்ளப்படவுள்ளன. அந்த 5 நிறுவனங்களையும் பெற்றுக்கொள்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர மற்றும் அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர். (05)

# மாணவியைப் பகிடிவதைக்குட்படுத்திய 6 பல்கலைக்கழக மாணவர்கள் கைது

சப்ரகமுவபல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவரை பகிடிவதைக்குட்படுத்திய 6 மாணவர்கள் சமனலவெள பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 14 ஆம் திகதியன்று '1997' என்றதொலைபேசி இலக்கத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சமனலவெள பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்துசந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானம் மற்றும் மொழிகள் பீடத்தின் நான்காம் வருட மாணவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

குறித்த மாணவர்கள் 6 பேரும் ஞாயிற்றுக்கிழமை சமனலவெள பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மொரவக, ருக்கஹவில, அலுத்தாராம, இமதுவ மற்றும் கித்தலாவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 23, 24 மற்றும் 25 வயதுடைய மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம்தொடர்பானமேலதிக விசாரணைகளை சமனலவெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# கஞ்சா செடிகளை வளர்த்த பிரித்தானிய பிரஜை கைது

குஷ் போதைபொருள் தயாரிப்பதற்காக கஞ்சா செடிகளை வளர்த்து வந்த வெளிநாட்டவர் ஒருவரை இராணுவ புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பெலியத்தை பகுதியில் சுற்றுலா வீசா மூலம் தங்கியிருந்த பிரித்தானிய பிரஜை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் பொலிஸார் சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டனர். சுற்றிவளைப்பின்போது 5 அடி உயரமுடைய கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# பெரமுன அரசியல்வாதி மீது தாக்குதல்

பொதுஜன பெரமுனவின் மஹியங்கனை உள்ளூராட்சிசபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரை தலைக்கவசத்தால் தாக்கிப் பலத்த காயம் ஏற்படுத்திய சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

மஹியங்கனை பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய மஹியங்கனை உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டத்தில் படுகாயமடைந்து கந்தகெட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுபின்னர்பதுளைபோதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தகெட்டிய, பதுலுஓயா பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# போதைப்பொருள் கடத்தல்காரர்களும் சேர்க்கப்படுவதே கந்தகாடு முகாமின் குழப்பங்களுக்கு பிரதான காரணம்

## புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன கூறுகிறார்

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கான அவசர வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் காரர்களும் புனர்வாழ்வு நிலையத்தில் சேர்க்கப்படுவதே முரண்பாடுகளுக்கு பிரதான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனவரி மாதத்தில் இரண்டு தடவைகள் கந்தகாடு புனர்வாழ்வு முகாமில் கைதிகளுக்கு இடையில் மோதல்சம்பவங்கள்பதிவாகியுள்ளன.

தற்போது வரை நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனினும் இதற்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (05

# அலவத்துகொடை சமன் தேவாலயம் மீள திறப்பு

சீல் வைக்கப்பட்டிருந்த கண்டி அலவத்துகொடை சமன்தேவாலயம்மக்கள் வழிபாட்டிற்காக ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

குழப்ப நிலை காரணமாக கடந்த 23ஆம்திகதி முதல்மூடப்பட்டிருந்தசமன்தேவாலயத்தின் பூசைவழிபாடுகள் உள்ளிட்ட இதர கடமைகள் நிமித்தம் மீண்டும் திறப்பதற்காக வேண்டி, குறித்த நடவடிக்கைகளுக்காக பாதுகாப்பு கோரி கண்டி பௌத்த விவகாரபிரதிஆணையாளர்அனுருத்த ஹேம பண்டார அலவத்துகொட பொலிஸாரிடம் சென்ற பொழுது, தேவாலயத்தின் கதவை உடைத்து திறந்தால், வீடு உடைத்த குற்றத்தின் பேரில் பிரதி ஆணையாளரை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரின்இந்நடவடிக்கைக்கு கடும் அதிருப்தி தெரிவித்துள்ள பிரதி ஆணையாளர்,தொல்பொருள்திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதுடன், பஸ்நாயக நிலமே பாண உதீப பண்டார, அக்குறணை பிரதேச செயலாளர் இந்திக்க அபேசிங்க மற்றும் பிரதேச கிராம உத்தியோகத்தர் ஆகியோர் முன்னிலையில் ஆலயத்தின் பிரதான வாயில் உடைக்கப்பட்டு திறக்கப்பட்டது. தேவாலயத்தின் பிரதான பூசாரியின் திடீர் மரணத்தின் பின்னர், தேவாலயக் கடமைகளை முன்னெடுத்துச் செல்ல அடுத்து பொறுப்பேற்றமற்றைய தரப்பினருக்கு தேவாலயத்தின் பிரதான சாவியை வழங்காததால்கண்டிபௌத்தவிவகார பிரதி ஆணையாளர் கடந்த 23ஆம் திகதி விகாரைக்கு சீல் வைத்துள்ளார்.

இதனால் கடந்த இரண்டு வாரங்களாக தேவாலயம் திறக்கப்படாததால், பூசை வழிபாடு செய்ய வந்த பக்தர்கள் கடும் அவதிக்குள்ளாகினர்.

பிரதான வாயில் பூட்டுகளை உடைத்து திறந்து பார்த்தபோது, தேவாலயத்திற்குள்இருந்தகாய்கறிகள், பழங்கள் அழுகி கடும் துர்நாற்றம் வீசியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்பொழுது தேவாலய கடமைகளை தற்காலிகமாக கவனிப்பதற்காக இறந்தவரின் உறவினரான மூத்தவரிடம் ஒப்படைத்ததாக அலவத்துகொட சமன் ஆலய பஸ்நாயக நிலமே அனுருத்த ஹேம பண்டார தெரிவித்தார்.

தேவாலயத்தைத் திறக்கின்ற போது அலவத்துகொடை பொலிஸார் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்காமை தொடர்பில், கண்டி பௌத்த விவகார பிரதி ஆணையாளர் மற்றும் அலவத்துகொட சமன் ஆலய பஸ்நாயக்க நிலமேயும் பொலிஸ் மா அதிபர் மற்றும் மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்ய தீர்மானித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றன. (05)

# முல்லைத்தீவு மாத்தளன் கடலில் குளிக்கசென்றவரை காணோம்

முல்லைத்தீவு மாத்தளன் கடலில் குளிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் நீரில் மூழ்கி மாயமாகியுள்ளார்.

முல்லைத்தீவு மாத்தளன் கடலில் குளிக்கச்சென்ற இளம் குடும்பஸ்தரான 33 வயதுடைய 10 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பினை சேர்ந்த இராசதுரை கஸ்தூரன் என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறுநீரில்அடித்துசெல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குடும்பத்தினருடன் கடலில் குழித்துக் கொண்டிருந்த வேளை இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. குடும்பமாக ஆண், பெண்கள் என சுமார் 15 பேர் வரையில் வாகனத்தில் சென்று குறித்த கடலில் குளித்துள்ளதை கரையில் உள்ள ஏனையவர்கள் அவதானித்துள்ளனர்.

இதன்போதேஒருவர்கரையில்இருந்து சற்றுதொலைவில் சென்ற நிலையில் அவர் கடல் அலையில் அடித்துச்செல்லப்பட்டு காணாமல்போயுள்ளார். இதனையடுத்து அங்குள்ளவர்களும் மீனவர்களும் குறித்த நபரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டபோதும் கடல் அலை தேடும் நடவடிக்கையில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.01.2024இல் வெளியிடப்பெற்றது.